தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:17-9-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடையான சூரியகாந்தியை உடனே விற்கலாம்

சூரியகாந்தி இந்தியாவின் மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர் ஆகும். இது சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்துப் பயிர்களின் மத்தியில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகளவில் 2011-12ல் மொத்த சூரியகாந்தி விதை உற்பத்தி 37.07 மில்லியன் டன்களாகும். 2010-2011ல் இதன் உற்பத்தி 40.20 மில்லியன் டன்களாக இருந்தது. சூரியகாந்தி உற்பத்தியில் உக்ரைன், ரஷ்யா. அர்ஜென்டைனா, சீனா. பிரான்ஸ், ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, துருக்கி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்திய எண்ணெய் பிழிவோர் சங்கத்தின் ஜூன் மாத ஆய்வு அறிக்கையின் படி ஜூன், ஜூலை 2013ல் உணவு எண்ணெய் இறக்குமதி 9.11 இலட்சம் டன்களும், உணவு சாராத எண்ணெய் இறக்குமதி 36,500 டன்களாவும் இருந்தது. மொத்த உணவு எண்ணெய் இறக்குமதி நவம்பர் 2012 முதல் ஜூன் 2013 வரை 7.11 மில்லியன் டன்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளது. 2013-14ல் பாமாயில் 8.4 மில்லியன் டன்கள், சோயா எண்ணெய் 1.3 மில்லியன் டன்கள், சூரியகாந்தி எண்ணெய் 1.2 மில்லியன் டன்கள் மற்றும் இதர உணவு எண்ணெய் 10,000 டன்கள் இறக்குமதி செய்யப்படும் என இறக்குமதி முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தோனேசியா, மலேசியா மற்றும் அர்ஜென்டைனா ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா உணவு எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்கிறது.

இந்தியாவில் 2012-13ல் சூரியகாந்தி உற்பத்தி 6.15 இலட்சம் டன்களாக இருந்தது. இது 2011-2012 ல் 6.20 இலட்சம் டன்களாகும். கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தமிழகத்தில் 2010-11ல் 8,718 எக்டேர் பரப்பளவிலிருந்து 10,039 டன்கள் சூரியகாந்தி விதை உற்பத்தி செய்யப்பட்டது. கரூர், தூத்துக்குடி, திருச்சி, தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் பங்களிப்பு தமிழ்நாட்டில் சாகுபடியாகும் சூரியகாந்தியின் நிலப்பரப்பில் 67.81 சதவீதமும் மற்றும் உற்பத்தியில் 60.55 சதவீதமும் ஆகும்.

சூரியகாந்தி கார்த்திகை (அக்டோபர் முதல் நவம்பர் வரை) மற்றும் சித்திரைப் பட்டங்களில் (ஏப்ரல் முதல் மே வரை) பயிரிடப்படுகிறது. அதிகமான வரத்து மார்ச்-மே மற்றும் ஜூன் -ஆகஸ்டு மாதங்களில் இருக்கிறது. தமிழ்நாட்டில் தற்பொழுது சித்திரைப் பட்டத்தில் (ஏப்ரல் -மே) விளைவித்த சூரியகாந்தி சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் வெள்ளக்கோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகியன முக்கிய சூரியகாந்தி சந்தை

மையங்களாகும். தமிழ்நாட்டில் சன்பிரட் மற்றும் கங்கா காவேரி ஆகிய வீரிய இனங்கள் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.

இறவை சாகுபடியில் சராசரியாக ஏக்கருக்கு 1000 முதல் 1200 கிலோ வரை சூரியகாந்தி விதை மகசூல் எடுக்கலாம். ஆனால் தரமற்ற விதை, பூச்சித்தாக்குதல், மின்சாரம் பற்றாக்குறை, குறைந்த மழை மற்றும் வேலையாட்களின் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் இந்தப் பருவத்தில் சூரியகாந்தி மகசூல் ஒரு ஏக்கருக்கு 500 முதல் 600 வரை மட்டுமே கிடைத்துள்ளது. சூரியகாந்தியின் சாகுபடிப் பரப்பு மற்றும் மகசூல் இரண்டுமே குறைந்துள்ளதால் சந்தைக்கு வரும் விதைகளின் அளவும் குறைந்துள்ளது.

விவசாயிகள் இப் பட்டத்தில் அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி விதையை விற்பது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வெள்ளக்கோயில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 13 வருடங்களாக நிலவிய விலையை ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின் படி சூரியகாந்தி விதையின் பண்ணை விலை புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதங்களில் கிலோ ஒன்றிற்கு சராசரியாக 38 ரூபாயாக இருக்கும். விலையேற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் விவசாயிகள் அறுவடையான சூரியகாந்தியை உடனே விற்குமாறு சிபாரிசு செய்யப்படுகிறது.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்